பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை 22.11.2020 கதிர் 248

## விமல் என்ற துரோகிக்கு மக்கள் பாடம் புகட்டுவர்!

### மனோ சாட்டையடி

விமல் வீரவன்சவுக்கு மண்டையில் முடியிருந்தாலும் மூளை இல்லை. அந்தத் துரோகி கட்சிக்கு மட்டுமல்ல கொழும்பு மாவட்ட மக்களுக்கும் இன்று துரோகம் இழைத்துள்ளார்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான

6

# பாடசாலைக் கொத்தணியை உருவாக்கி விடாதீர்!

### கல்வி அமைச்சரிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

**மூன்றாம் தவணைக் கற்றல் செயற்பாடுகளுக்காக நாளை பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகின்றன என்று அரசு அறிவித்துள்ள நிலையில் தற்போதைய சூழலில் பாடசாலைகளை மீளவும் ஆரம்பித்து பாடசாலைக் கொத்தணியை உருவாக்கிவிடாதீர்கள் என கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

**இது தொடர்பில் கல்வி அமைச்சருக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இன்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-**

2

### மாவீரர் நினைவேந்தல் வாரத்தையொட்டி

## வவுனியாவில் சிவப்பு, மஞ்சள் கொடிகள்: உடன் அகற்றுமாறு பொலிஸார் வற்புறுத்து





மாவீரர் வாரத்தை முன்னிட்டு சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டு உணர்வு பூர்வமாக நினைவேந்தல் நடவடிக்கை வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த கொடிகளை அகற்றுமாறு கோரி வவுனியா பொலிஸார் அவ்விடத்தை முற்றுகையிட்டனர்.

நீதிமன்றக் கட்டளைக்கு

2

## முல்லையில் உலக மீனவர் தின நிகழ்வு





முல்லைத்தீவில் மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், உலக மீனவர் தின நிகழ்வு இன்று இடம்பெற்றது.

'நீல பொருளாதார சவால்களுக்கு மத்தியில், மக்களுடைய உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகப் பலமான சமூக இயக்கத்தைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற குறித்த நிகழ்வானது முல்லைத்தீவு மாவட்ட செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

தற்காலத்தில் சட்டவிரோத தொழில்களாலும், வெளிமாவட்ட மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களாலும் முல்லைத்தீவு மாவட்ட

2

## 30 நாள்களில் 70 பேர் சாவு!

### அடங்க மறுக்கும் கொரோனா

இலங்கையில் கொரோனா வைரஸ் மூன்றாவது அலை மூலம் நேற்றிரவு வரை 16 ஆயிரத்து 252 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் இதுவரையில் (ஒக்டோபர் 22 முதல் நவம்பர் வரை) 70 பேர் பலியாகியுள்ளனர்.

மினுவாங்கொடை கொத்தணி மூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொட கொத்தணி மூலம் 13 ஆயிரத்துக்கும்

2

## கோட்டா ஆட்சியில் இருக்கும் வரைக்கும் மாவீரர் நினைவேந்தலுக்கு இடமில்லை!

### ஆளுங்கட்சி எம்.பி. மேஜர் பிரதீப் உந்துகொட திட்டவட்டம்

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருக்கும்வரை, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

- இவ்வாறு ஆளுங்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாயகக் கோட்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றார்கள். உயிரிழந்த விடுதலைப்புலிகளை நினைவு கூரும் மாவீரர் நாள் பற்றியும் நாடாளுமன்றத்தில் கதைக்கின்றார்கள்.

நாட்டில் தற்போது முதுகெலும்புள்ள அரசியல் தலைவர்களே ஆட்சியில்

2

## மத்திய அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானத்தில் முறைகேடுகள்!

### கோப் குழுக் கூட்டத்தில் அம்பலம்

மத்திய அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக நாடாளுமன்றத்தில் கூடிய அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக்கூட்டத்தில் அம்பலமாகியுள்ளது. இந்த நெடுஞ்சாலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வுகளுக்காக மாத்திரம் 1.7 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவு செய்யப்பட்டிருப்பதாக இங்கு உறுதியானது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதலாவது கட்டமான கடவத்தையிலிருந்து மீரிகம வரையிலான பகுதியின் கட்டுமானப்பணிகள் 2015ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரை தாமதமானமையால் 8 பில்லியன் ரூபா நஷ்டம்

2

## திருவையாறு மரண வீட்டில் சடலத்தை எடுத்துச் செல்ல 7 பேருக்கே அனுமதி!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.22

திருவையாறில் இடம்பெற்ற மரண வீட்டிற்கு கொழும்பில் இருந்து வந்த ஒருவரால் ஐந்து குடும்பங்களுடன் மட்டும் மரண நிகழ்வை நடத்தும் நிலைமை ஏற்பட்டது.

இறந்தவரின் மகள் கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெருவில் இருந்து மரண வீட்டுக்கு வந்த நிலையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அயலவர்கள் அனைவரும் மரண வீட்டிற்குச் செல்ல

2

## சஹ்ரானை வழிநடத்தியவர்கள் கண்டறியப்படும் வரை தேசிய பாதுகாப்பை ஒருபோதும் உறுதிப்படுத்த முடியாது

### முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாட்சியம்

இலங்கையில் தீவிரவாதத் தாக்குதலுக்கு சஹ்ரான் ஹாசீமை வழிநடத்தியவர்கள் அடையாளம் காணப்படும் வரை நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவே முடியாது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியளிக்கும்

2

## ஆயுதப் போராட்டத்தையே ஏற்றுக் கொள்ளாத சுமந்திரன் அதில் ஈடுபட்டு மரணித்தோரை எப்படி ஏற்றுக்கொள்வார்?

### சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,நவ.22

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாத சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு மரணமடைந்தவர்களை எவ்வாறு ஏற்றுக் கொள்வார் என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த பண்டிதர் என அழைக்கப்படும்

2



## 2 எறிகணை குண்டுகள் மீட்பு





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பலாலி அன்ரனிபுரப் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து துருப்பிடித்த நிலையில் இரண்டு எறிகணை குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அன்ரனிபுரத்தில் தனியார் காணியின் உரிமையாளர் தனது காணியைத் துப்பரவு

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மத்திய அதிவேக நெடுஞ்சாலை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருப்பதாகவும் இங்கு புலப்பட்டது.

இதில் முதலாவது சாத்தியக்கூறு ஆய்வுக்காக SMEC நிறுவனம் கொள்முதல் நடைமுறைகளுக்கு அப்பால் தெரிசெய்யப்பட்டமையும் விசாரணைகளில் தெரியவந்தது. அத்துடன், 2012ஆம் ஆண்டு வடக்கு அதிவேக நெடுஞ்சாலை என மூன்று கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்ட திட்டம் 2015 ஆண்டாகும்போது நான்கு கட்டங்களைக் கொண்ட மத்திய அதிவேக நெடுஞ்சாலை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இதற்கமைய என்டேரமுல்ல முதல் மீரிகம வரையும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நெடுஞ்சாலையை கடவத்தையிலிருந்து அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், இந்தத் தீர்மானம் காரணமாக மீண்டும் சாத்தியக்கூறு ஆய்வுகள் சிலவற்றுக்காக பெருந்தொகை பணம் செலவுசெய்யப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு எந்தவொரு முறையான நிபுணத்துவ ஆலோசனையும் இன்றி அமைச்சரவையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இங்கு வெளிப்பட்டது.

அசல் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தால் ஏற்பட்ட நிதி இழப்புக் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டார்.

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு கூடியபோது அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால், நாடாளுமன்ற உறுப்பினர்களான இரான் விக்ரமரத்ன, ஜகத் புஷ்பகுமார, பிரேம்நாத்.சி.தொலவத்த, ரஞ்சன் ராமநாயக்க, டி.வி.சானக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் கடவத்தையிலிருந்து மீரிகம வரையான பகுதி வடக்கு அதிவேக நெடுஞ்சாலை என்ற பெயரிலிருந்த திட்டத்தில் பொத்துஹர முதல் ஹீன்தெனிய வரையில் கட்டுமானங்களை மேற்கொள்ள கொள்முதல் நடைமுறையையும் மீறி MCC என்ற சீன நிறுவனத்தைத் தெரிவுசெய்ய 2015 இல் அமைச்சரவை தீர்மானம் எடுத்ததாகவும் இங்கு வெளிப்பட்டது.

இதற்காக 159 மில்லியன் ரூபா நிதி செலவுசெய்யப்பட்டதுடன், பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு இதுபற்றிய தீர்மானத்தை எடுத்ததுடன், கொடுப்பனவு தொடர்பான பிரச்சினை காரணமாக இப்பகுதிக்கான கட்டுமானப் பணிகள் 04 வருடங்கள் தாமதமடைந்து 2019ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இங்கு வெளிப்பட்டது. இந்த காலதாமதத்தினால் ஏறத்தாழ 8 பில்லியன் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கோப் குழு விசாரணைகளின் போது புலப்பட்டது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாவது கட்டமான பொத்துஹர முதல் கலகெதர வரையிலான பகுதியின் கொள்முதல் செயற்பாடுகளில் காணப்பட்ட மோசடிகள் காரணமாக கொள்முதல் செயற்பாடுகள் பூர்த்தியடையவில்லை. விலைமனுக் கோரலுக்கு அமைய MS Taisei என்ற நிறுவனத்துக்கு இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தபோதும் Fujita என்ற நிறுவனத்துக்கு இதனை வழங்க பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் அழுத்தம் இருந்ததால் கொள்முதல் செயற்பாடுகளில் காலதாமதம் ஏற்பட்டதாகவும் இங்கு வெளிப்பட்டது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுபோன்ற குழு இருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லாதபோதும், பில்லியன் பெறுமதியான கொள்முதல் செயற்பாடுகளில் தொடர்புபடுவதால் இது நாட்டின் நிதி ஒழுக்கத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் கோப் குழுவின் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

பொருளாதர முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு சில சந்தர்ப்பங்களில் எழுத்துப்பூர்வமாக செல்வாக்கு செலுத்தியது என்பதற்கான சான்றுகள் இருப்பதாகவும், கண்காணிப்பதற்கும், ஒத்துழைப்பு வழங்குவதற்கும் அமைக்கப்படும் குழுக்கள் கொள்முதல் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்துவது ஒரு பெரிய பிரச்சினை என்றும் அவர் கூறினார். எனவே, கொள்முதல் செயற்பாடுகளுக்கு ஏற்ப இந்த அதிவேக நெடுஞ்சாலையில் எதிர்காலப் பணிகளை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் தலைவர் வலியுறுத்தினார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் தற்போதைய நிலை குறித்தும் கோப் தலைவர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தார். கடவத்தை முதல் மீரிகம வரையில் 5% பணிகள் மட்டுமே நிறைவடைந்துள்ளதாகவும், மீரிகம முதல் குருநாகல் வரையிலான இரண்டாவது கட்டத்துக்கான பகுதியில் 75% பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் இதன்போது தெரியவந்தது. அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் கட்டுமானப் பணிகளைப் பூர்த்திசெய்ய முடியும் என்றும் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அதேநேரம், பொத்துஹரவிலிருந்து கலகெதர வரையிலான பிரிவுக்கு கொள்முதல் செயல்முறை மீண்டும் தொடங்கப்பட் டுள்ளது என்றும், அடுத்த ஆண்டு பணி களைத் தொடங்க முடியும் என்றும் திட்டப் பணிப்பாளர் கூறினார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதலாவது, மூன்றாவது மற்றும் நான்காவது கட்டங்களின் முன்னேற்றம் குறித்து முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கவும் குழு பரிந்துரைத்தது.

2012ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகளுக்காக ஏறத்தாழ 284 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதாகவும் இங்கு தெரியவந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வுகளில் சில தற்போதைய அதிவேக நெடுஞ்சாலைக்குப் பயனற்றவையாகக் காணப்படுகின்றன என்று வருத்தம் தெரிவித்த தலைவர், எதிர்கால நிதி நடவடிக்கைகள் அனைத்தையும் நிர்வகிப்பது முக்கியமானது என்றும் வலியுறுத்தினார். அத்துடன், இந்தத் திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வுகளும் இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எந்தளவு பயனுள்ளவை என்பது குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் கோப் குழுவின் தலைவர், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

## திருவையாறு மரண ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சுவதோடு, அந்த வீடு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. குடும்ப உறவுகள் மட்டுமே மரண நிகழ்வை நடத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இன்று இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டபோது 7 பேர் மட்டுமே சடலத்தை எடுத்துச் செல்ல சுகாதாரத் தரப்பினர் அனுமதி வழங்கினர்.

இறந்தவரின் முதல் உறவுகளான 5 குடும்பங்கள் செத்த வீட்டில் பங்குபற்றின. அந்த ஐந்து குடும்பங்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஐந்து குடும்பங்களுடன் எந்தவிதக் கிரியைகளும் இன்றியே மரண வீடு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சஹ்ரானை வழி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் அடையாளம் காணப்படும் வரையில் இந்த விசாரணைகள் பூரணமடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரானுக்கும் வெளிநாட்டு தீவிரவாத அமைப்புகளுக்கும் இடையிலான தொடர்புகளைக் கண்டறிய பல்வேறு புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவ்வாறான தொடர்புகள் வெளிப்படவில்லை என்றும் ரவி செனவிரத்ன சாட்சியமளித்துள்ளார்.

சஹ்ரானை வழிநடத்தியவர்கள் அடையாளம் காணப்படும் வரை இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ள அவர், தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

## ஆயுதப் போராட்ட ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்துரை ரவீந்திரனது வீட்டில் நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினார். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே சுரேஷ் பிறேமசந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வீடுகளில் வைத்து எல்லோரும் விளக்கேற்றலாம். அதில் யாருக்கும் எந்தத் தடையும் இல்லை. அவர் துயிலும் இல்லத்திற்கு வந்து அஞ்சாது விளக்கேற்ற வேண்டும்.

சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாதவர் என்பது வெளிப்படையாக தெரிந்த உண்மை. அவ்வாறு இருக்கையில் ஆயுதப் போராட்டத்தின் போது உயிர்நீத்தவர்களை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்? - எனக் கேள்வியெழுப்பினார்.

## 2 ஏறிகணை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும்போது குறித்த குண்டுகளை கண்டுள்ளார். அவர் உடனடியாகத் துப்புரவுப் பணியை நிறுத்திவிட்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவித்துள்ளார். பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் குறித்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன

குண்டுகளைச் செயலிழப்பதற்காக வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள தரவைப் பகுதிக்குகொண்டு செல்லப்பட்டுள்ளன.

## கோட்டா ஆட்சியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றார்கள். எனவே, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் வரை மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு இடமளிக்கப்படாது - என்றார்.

## 30 நாள்களில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இவ்வாறு மூன்றாவது அலை மூலம் கொரோனா தொற்றியவர்களில் நேற்று வரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் நேற்று வரை மொத்தமாக 19 ஆயிரத்து 771 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 13 ஆயிரத்து 590 பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்றும் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இதன்படி இலங்கையில் கொரோனா தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 83 ஆக அதிகரித்துள்ளது.

## முல்லையில் உலக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள இடர்பாடுகள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டன.

மீனவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்கு உரிய அதிகாரிகள் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது தொடர்பிலும் பேசப்பட்டது.

தொடர்ந்து நிகழ்வின் இறுதியில், முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளைத் தீர்த்துவைக்குமாறு கோரி மாவட்ட மீனவர்களின் சார்பில் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அந்தவகையில் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம், சமேளனம், என்பவற்றின் சார்பில், மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர், மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உத்தியோகத்தர், மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் சம்மேளனம் என்பவற்றின் பிரதிநிதிகள், மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் மீனவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## வவுனியாவில் சிவப்பு,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைவாக ஆர்ப்பாட்டம் மற்றும் நடை பயணமின்றி சிவப்பு, மஞ்சள் கொடிகளை தனது வீட்டுடன் கூடிய கடை வாசலில் பறக்கவிட்டு தனது உறவுகளுக்கான நினைவேந்தல் வாரத்தை வவுனியா, தோணிக்கல் பகுதியில் செ. அரவிந்தன் என்பவர் ஆரம்பித்துள்ளார்.

தனது வீட்டு வாசலின் முன்பகுதியில் கம்பங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டுள்ள அவர், தனக்கு வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையை மீறாத வகையில் இறந்த தனது உறவுகளைத் தான் நினைவுகூரவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றிரவு 7.30 மணியளவில் அவ்விடத்திதுக்குச் சென்ற வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் அக்கொடிகளை அகற்றுமாறு தெரிவித்தனர். நீதிமன்றக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட முடியாது எனவும் அவர்கள் கூறினர். அத்துடன் கொடிகளை நாட்டிய நபருடன் அவர்கள் தர்க்கத்திலும் ஈடுபட்டனர். இதன்போது தான் நீதிமன்றக் கட்டளைக்கு ஏற்பவே செயற்பட்டுள்ளேன் எனவும், சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடத் தடையில்லை எனவும் பொலிஸாருடன் குறித்த இளைஞர் முரண்பட்டார்.

இதையடுத்து, மேலதிகாரியின் உத்தரவையடுத்து அவ்விடத்திலிருந்து பொலிஸார் அகன்று சென்றனர். மேலும், இராணுவத்தினரும் அவ்விடத்திற்கு வருகை தந்து கொடிகளைப் பார்வையிட்ட பின்னர் அங்கிருந்து சென்றனர். (100)

## பாடசாலைக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை தரம் 6 முதல் தரம் 13 வரை பாடசாலைகள் ஆரம்பமாகும் என அறிவித்துள்ளீர்கள். இன்றுவரை மரணங்கள் அதிகரித்தவாறு உள்ளன. தொற்றாளர்கள் எண்ணிக்கை உயர்ந்தே செல்கின்றது. மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை கொத்தணியும், பேலியகொட கொத்தணியும் நாடு முழுவதும் பரவியுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆரம்பிக்கும் போதே மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை நோயாளர்கள் கண்டறியப்பட்டனர். அதன் காரணமாகவே பரீட்சையை இரு வாரங்களுக்காவது ஒத்திவைத்து தொற்றைக் கட்டுப்படுத்திய பின்னர் பரீட்சையை நடத்துங்கள் எனக் கேட்டோம். பரீட்சை தொடர்ந்தது. தொற்றோடு மாணவர்களும் பரீட்சை எழுதினர். அதனை இயல்பு நிலை எனக் கருதிய மக்கள் சாதாரணமாக நடந்துகொண்டனர். அதன் விளைவே இன்றைய மோசமான நிலைக்கும் காரணம்.

நாட்டில் உருவாகியுள்ள இரண்டு கொத்தணிகளுக்கு மேலதிகமாக பாடசாலை கொத்தணி என ஒன்று உருவாகுவதற்கு வழியேற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு சில அறிவுறுத்தல்கள் இன்னும் தெளிவில்லாமல் இருக்கின்றன.

01. ஆரம்பப் பிரிவுகள் (தரம் 1 முதல் தரம் 5 வரை) இணைந்துள்ள இடைநிலை, மேல்நிலைப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் பாடசாலை செல்ல வேண்டுமா?

02. வெவ்வேறு மாவட்டங்களில் கடமையாற்றும், வேறு மாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகள் இயங்கும் பிரதேசங்களுக்கு எவ்வாறு செல்வது அவர்களின் கடமை ஒழுங்கு என்ன?

போன்ற விடயங்களில் தெளிவான அறிவித்தல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யுத்தக் குற்ற மறைப்பு ஏன்?

யுத்தக் குற்ற விவகாரம் தொடர்பில் ஆஸ்திரேலியப் படைகள் எதிர்கொள்ளும் நெருக்கடி ஒன்றை ஒட்டி கருத்து வெளியிட்டுள்ள – இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவராக இருந்த – இரட்ணஜீவன் ஹூல் அவ்விவகாரத்தை இலங்கையுடன் ஒப்பிட்டு சில ஆதங்கங்களையும் முன்வைத்திருக்கின்றார்.

2001 இல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதலை அடுத்து ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினருடன் சேர்ந்து போரிடுவதற்கு ஆஸ்திரேலியப் படையினர் அனுப்பப்பட்டனர். 2014 இல் அப்படையினர் விலக்கப்படும் காலத்துக்கு இடைப்பட்ட வேளையில் ஆப்கான் மண்ணில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியவராயினர்.

இலங்கையைப் போலவே, ஆரம்பத்தில் ஆஸி தரப்பும் அதை மறுத்தது. அவ்விடயம் பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்திய ஆஸி பத்திரிகையாளர்கள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், ஆஸி உண்மையான ஜனநாயக நாடு. பெரும்பான்மையினரின் முடிவுதான் நீதி என்றோ, தீர்ப்பு என்றோ கருதும் ஜனநாயக கேலிக் கூத்து அங்கு இல்லை. அட்சர கணித எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்வு கூறும் ஜனநாயக விதண்டவாதத்துக்கும் அங்கு இடமில்லை.

ஆழமான ஜனநாயக விழுமியங்கள் வேரோடிய நாடு என்பதால், யுத்தக் குற்றங்களை அம்பலப்படுத்திய ஊடகவியலாளர் மீதான விசாரணையை அந்த நாடு கைவிட வேண்டியதாயிற்று என்றும் – ஊடகவியலாளர்களைப் பற்றி அல்லாது போர்க் குற்றச்சாட்டுக்களைப் பற்றி விசாரணை நடத்த அந்த நாட்டு அரசு தள்ளப்பட்டது என்றும் – கூறப்பட்டது.

அந்த விசாரணையின் முடிவை – நானூறு பக்க அறிக்கையை – விசாரணை ஆணையம் மூன்று நாள்களுக்கு முன்னர் வெளியிட்டது.

அதன்படி –

ஆயுதம் தரிக்காத 39 அல்லது அதற்குக் கூடிய ஆப்கானிஸ்தான் பொது மக்களும், பிள்ளைகளும், கைதிகளும் சட்ட விரோதமாகக் கொல்லப்பட்டனர் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இராணுவத்தினர் இரத்த வெறியுடன் இயங்கினர், படையினர் சட்டத்தைக் கையில் எடுத்துள்ளனர் என்று ஆஸி படைத் தளபதி ஜெனரல் அங்குஸ் காம்பெல் வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

குற்றம் சுமத்தக்கப்பட்டவர்களின் பதவிகள், பதவி உயர்வுகள், விருதுகள் யாவும் பறிக்கப்பட்டுள்ளன.

அந்நிய மண்ணில் தனது படைகள் புரிந்த அத்துமீறல்களை – யுத்தக் குற்றங்களை – நீதி, நேர்மைப்படி விசாரணை செய்து, உண்மைகளைக் கண்டறிந்து அம்பலப்படுத்தியுள்ள ஆஸி, அதையடுத்து பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீட்டை வழங்குவது குறித்தும் சிந்திக்கும்.

இந்த நடவடிக்கை மூலம் உலகில் தனது தனித்துவப் பண்பியல்பையும், பெருமையையும் நிலைநாட்டியிருக்கின்றது ஆஸ்திரேலியா.

உண்மையை வெளிக் கொணர்ந்து, குற்றத்தை ஒப்புக் கொண்டமை மூலம், ஆசி தன்னைத் திருத்திக் கொண்டது மட்டுமல்ல, இது போன்ற நீதி, நேர்மையான விசாரணை ஒன்றை நடத்துவதற்கு தனது சகபாடியான அமெரிக்காவையும் அது வழிப்படுத்தியிருக்கின்றது.

ஜனநாயக விழுமியங்களின் உச்சத்தை வெளிப்படுத்தியுள்ள ஆஸி நாட்டு அரசுத் தலைமை போல இலங்கை நடந்து கொள்ளுமா என்ற ஆதங்கத்தை முன்வைத்திருக்கின்றார் பேராசிரியர் இரட்ண ஜீவன் ஹூல்.

ஆப்கானிஸ்தானில் ஆஸிப் படைகள் குற்றமிழைத்த சம்பவங்களில் கொல்லப்பட்டவர்கள் மொத்தம் 39 பேரே. ஆனால் எம் மத்தியில் ஐ.நாவின் கருத்துப்படி நாற்பதாயிரம் பேரும், வேறு தகவல்களின் பிரகாரம் ஒரு லட்சம் பேர் வரையும் கொல்லப்பட்டனர் என்று சுட்டிக்காட்டும் அவர், இந்தக் கொலைகள் விடயத்தை அணுகும் விவகாரத்தில் ஆஸி மற்றும் இலங்கை அரசுகளின் போக்கில் இருக்கும் வேறுபாடு குறித்தே விசனம் தெரிவிக்கின்றார்.

அந்நிய மண்ணில் – பிற தேசத்துப் பிரஜைகளை – தன் படைகள் கொன்றன என்பதற்காகப் பரபரக்கின்றது ஆஸி. அந்த நாட்டுப் பிரதமர், ஆப்கான் அதிபரிடம் பகிரங்க மன்னிப்புக் கோருகின்றார்.

இங்கு தன்னுடைய நாட்டு மக்கள் என்று தான் கூறிக் கொள்ளும் மக்களையே தன் படைகள் கொன்றொழித்தன என்ற குற்றச்சாட்டைப் பரிசீலிக்கவே நாட்டின் அரசுத் தலைமையும், அந்த அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வந்த பெரும்பான்மை இன மக்களும் தயாரில்லை.

யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரிக்க முற்பட்ட தனது இனப் பத்திரிகையாளரையே – பிரகீத் எக்னெலிகொட போன்ற ஊடகவியலாளர்களையே – காணாமலாக்கி விட்டு, அது பற்றிய உண்மையைக் கூடக் கண்டறிய விருப்பமற்றிருக்கும் மக்கள் கூட்டம் இது.

இந்தத் தரப்பை, அந்த உயரிய ஜனநாயக நாகரிகமுடைய ஆஸி மக்கள் மற்றும் அந்நாட்டு அரசுடன் ஒப்பிட்டுக் கற்பனை பண்ணுவது நமது அதீத நப்பாசை அன்றி வேறில்லை.

அங்கு ஆப்கானுக்கு அனுப்பப்பட்ட ஆயுதப் படையில் ஒரு பிரிவோ, ஒரு குழுவோ அந்தக் குற்றங்களைப் புரிந்திருக்கக் கூடும்.

ஆனால், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்ந்த மோசமான யுத்தக் குற்றங்களின் மூலத்தைத் தேடினீர்களானால், அது அரச படைகளின் மட்டத்துடன் அடங்கி விடாது. அப்படிப் படைகளை வழி நடத்தத் தூண்டிய அரசையும், அந்த அரசுக்கான தலைவர்களையும், அதற்காகவே தமது வாக்குகள் மூலம் தெரிவு செய்த பேரினவாத மக்களையும் கூட, தார்மீக ரீதியாகக் குற்றப் பொறுப்பாக்கும் மூலத்தை நாம் காணமுடியும். அதனால்தான் அவை விசாரிக்கப்படாமல் தரை விரிப்புக்குக் கீழ் போட்டு நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன.

## யாழ். பொலிஸ் அதிகாரி அரசியல்வாதியாக கருத்துத் தெரிவித்ததைக் கண்டிக்கின்றேன்

### ராஜபக்ஷக்களின் சகா அங்கஜன் எம்.பி. போர்க்கொடி

முப்பது வருட கால கொடிய போரால் துயருற்ற எமது மக்கள் அக்காலத்தில் கூட உணவு பஞ்சத்தால் உயிர்நீத்த சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என யாழ். பொலிஸ் அதிகாரி நீதிமன்றத்தில் தெரிவித்த கருத்துக்குக் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர்ச்சூழலில் உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்கான நினைவேந்தலை தடைசெய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கில் முன்னிலையாகிய குறித்த பொலிஸ் நிலைய அதிகாரி, தமிழ் மக்களின் உண்ணும் உணவுகளைக் கொச்சைபடுத்தும் முகமாக சோறும், புட்டும், வடையும் சாப்பிட்டுக் கொண்டிருந்த வடக்கு மாகாண மக்களுக்கு பீட்ஸா சாப்பிடும் நிலையை உருவாக்கினோம் என்று கூறியிருந்தார்.



முப்பது வருட கால கொடிய போரால் துயருற்ற எமது மக்கள் அக்காலத்தில் கூட உணவுப் பஞ்சத்தால் உயிர்நீத்த சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பொலிஸ் துறையில் உயர் பதவியில் இருப்போர் இன ஐக்கியத்தைக் குழப்புவதும் மற்றும் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் கருத்துக் கூறுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களைத் தேர்தலின்போது உசுப்பேத்தி அரசியல் சுயலாபம் தேடுகின்ற அரசியல்வாதிகளுக்கு இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் காலங்களில் மக்களை ஏமாற்றுவதற்குப் பக்கபலமாக அமைந்து விடும் – என்றார்.

## முதல் 10 எம்.பிக்களில் இடம் பிடித்த ஒரேயொரு மலையகத் தமிழ் எம்.பி.

நாடாளுமன்றத்தில் ஒக்டோபர் மாதம் சிறப்பாகச் செயற்பட்ட 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுள் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் எம்.பி. ஒருவரும் இடம்பிடித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலு குமாரே 7 ஆவது இடத்தில் உள்ளார்.

நாடாளுமன்றம் வருகை, விவாதங்களில் பங்கேற்பு உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டே manthri.lk என்ற இணையத்தால் குறித்த பட்டியல் தயாரிக்கப்படுகின்றது.

முதல் பத்து இடங்களைப் பிடித்த எம்.பிக்கள் விபரம் வருமாறு:-

1. அநுரகுமார திஸாநாயக்க
2. அஜித் நிவாட் கப்ரால்
3. சஜித் பிரேமதாஸ
4. ஹர் டி சில்வா
5. மஹிந்தானந்த அளுத்கமகே
6. பந்துல குணவர்தன
7. வேலு குமார்
8. புத்திக்க பத்திரண
9. எஸ்.சேமசிங்க
10. எஸ்.எம். மரிக்கார்

## ஒக்ஸ்போர்ட் கொரோனா தடுப்பூசி ஆய்வில் இலங்கைப் பெண்மணி!

கொவிட் – 19 கொரோனா வைரஸ் தொற்று நோயை தடுப்பதற்கான மருந்தை கண்டுபிடிக்கும் பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வில் பிரதம ஆய்வாளராக இலங்கையைபூர்வீகமாகக்கொண்ட மஹேஷி என். ராமசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் பிறந்த அவர், பிரித்தானியாவில் வைத்திய கல்வியை படித்து முடித்துள்ளார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தால் கொவிட் – 19 தடுப்பூசிக்கான ஆய்வுகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்ற நிலையிலேயே, இவர் அந்த குழுவில் இடம்பிடித்துள்ளார்.

அவர் மேகன் மருத்துவக் கல்லூரியில் முதன்மை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். மேலும், ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி குழுமத்தின் பிரதம ஆய்வாளராகவும், ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் விருது பெற்ற மூத்த மருத்துவ விரிவுரையாளராகவும் உள்ளார்.



மருத்துவ சஞ்சிகையான The Lancet சஞ்சிகையின் உலகில் ஒக்ஸ்போர்ட் கொவிட் தடுப்பூசி என்று அழைக்கப்படும் ChAdOx1 nCoV-19 தடுப்பூசி தொடர்பான ஆய்வுக் கட்டுரையில், மஹேஷி என் ராமசாமியின் பெயர் முன்னிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மஹேஷி என் ராமசாமியின் தாய் பேராசிரியர் சமரநாயக்க ராமசாமி, கொழும்பு விசாக்கா கல்லூரியின் பழைய மாணவி என்பதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறையில் பட்டம் பெற்றுள்ளார்.

அவரது தந்தையான ரஞ்ஜன் ராமசாமியும், பிரசித்தி பெற்ற விஞ்ஞானியாவார். அதனைத் தொடர்ந்து பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் அவர் பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார்.

## ஐ.டி.எச். வைத்திய சாலையில் தப்பிச்சென்ற பெண் பிடிபட்டார்!

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தப்பிசென்ற பெண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் இரத்தினபுரி – எஹெலியகொட பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது தனது இரண்டரை வயது மகனுடன் அந்தப் பெண் இரவு தப்பியோடியிருந்தார்.

இந்நிலையில், பெண்ணைக் கண்டுபிடிக்க புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் விசாரணை மற்றும் தேடுதல் இடம்பெற்று வந்த நிலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் மகனுடன் பஸ்ஸில் தனது ஊருக்குச் சென்றுள்ளதுடன், அங்குள்ள உறவினர் ஒருவர் வீட்டில் மகனை ஒப்படைத்து விட்டு அங்கிருந்து சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகம், புதுச்சேரி கரையோர பகுதிகளில் எதிர்வரும் 25 ஆம் திகதி புயல் எச்சரிக்கை



தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் எதிர்வரும் 25 ஆம் திகதி புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது.

இது அடுத்த 24 மணிநேரத்தில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று புயலாக மாறும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் தமிழகம், புதுச்சேரி கடலோர மாவட்டங்களுக்கு நாளை முதல் மூன்று நாள்களுக்கு கனமழை அல்லது மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை முதல் பலத்த மழை பெய்யும் என்றும் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# தடுப்பு மருந்துக்குப் பொது நிதி திரட்ட ஜி 20 நாடுகள் முடிவு!

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொரோனா தடுப்பு மருந்து மலிவாக கிடைக்க நிதி திரட்டுவதற்கு ஜி 20 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.

மருந்து விநியோகம் தொடர்பான திட்டங்களும் வகுக்கப்பட உள்ளன. உலகின் மிகப்பெரிய பொருளாதார பலம் படைத்த இருபது நாடுகளின் உச்சி மாநாடு காணொலி வாயிலாக நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கொரோனா தடுப்பு மற்றும் சுற்றுச் சூழல் உள்ளிட்ட சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டன.



இன்று கொரோனாவுக்கு எதிராக நிதித் திரட்டுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கிறது. கொரோனா தடுப்பூசி கிடைக்காமல் எந்த ஏழை நாடும் விடுபட்டு விடக்கூடாது என்று தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# பெண்ணிடம் சேட்டை விட்டவரை அடித்து தோப்புக்கரணம் போடச் செய்த பொலிஸார்!

## குவியும் பாராட்டுக்கள்

மத்தியபிரதேசத்தில் வீதியில் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த இரண்டு இளைஞர்களை, பொலிஸார் அடித்து இழுத்துச் சென்றனர்.

தேவாஸ் பகுதியில், பெண்களிடம் அத்துமீறினர் என இரண்டு இளைஞர்களை பிடித்த பொலிஸார், வீதியிலேயே அவர்களைத் தோப்புக் கரணம் போட வைத்தனர். தொடர்ந்து, இருவரது கைகளையும் கட்டிய பொலிஸார், பிவிசி பைப்களை கொண்டு சரமாரியாகத் தாக்கியவாறே, காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.



# கனடாவுக்கு திருடப்பட்ட அன்னபூரணி சிலை இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டது!

## 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட சம்பவம்



வாரணாசி கோயிலில் இருந்து 100 ஆண்டுகளுக்கு முன்பு கனடாவுக்கு திருடிச் செல்லப்பட்ட அன்னபூரணி சிலை இந்திய தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கனடாவில் உள்ள ரெஜினா பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட மெக்கென்ஸி அருங்காட்சியக கலைக்கூடத்தில் இருந்த சிலை தற்போது ஒப்படைக்கப்பட்டது.

பீடத்தில் அமர்ந்த நிலையில் கையில் பெரிய கிண்ணத்தையும் மற்றொரு கையில் அன்னம் வழங்கும் கரண்டியும் வைத்திருப்பது போன்று அன்னபூரணி சிலை அமைந்துள்ளது.

கடந்த 1913 ஆம் ஆண்டு வாரணாசியில் கங்கை நதிக்கரையில் உள்ள ஒரு கோயிலில் இருந்து இந்த சிலை திருடப்பட்டு இருக்கலாம் என ஆய்வாளரும், கலைஞருமான மெஹ்ரா தெரிவித்துள்ளார். அன்னபூரணி சிலை விரைவில் இந்தியாவுக்கு திரும்ப வந்து சேர உள்ளது.

# இந்தியா உட்பட 3 நாட்டு கடற்படைகளின் கூட்டுப்பயிற்சி நேற்று ஆரம்பமாகியது!

இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளைச் சேர்ந்த கடற்படை வீரர்களின் ஒத்திகை நேற்று அந்தமான் கடல் அருகே ஆரம்பமாகியது..

இரண்டு நாள்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியில் மூன்று நாடுகளைச் சேர்ந்த படகுகள் மற்றும் கப்பல்களும் இடம்பெற்றுள்ளன.



புயல் காலத்தில் மீனவர்களை பாதுகாப்பாக மீட்பது, பயங்கரவாத அச்சுறுத்தலைத் தடுப்பது போன்ற பயிற்சிகளில் மூன்று நாடுகளின் வீரர்களும் ஈடுபட்டனர்.

கொரோனா முன்னெச்சரிக்கையால் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளாமல் கடலோடு பயிற்சி நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அசாம் முன்னாள் முதல்வர் தருண் கோகாய் உடல் நிலை மிகவும் மோசம் எனத் தகவல்!

அசாம் முன்னாள் முதலமைச்சர் தருண் கோகாய் உடல் நிலை மிகவும் மோசம் அடைந்துள்ளதாக அந்த மாநில சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அசாம் மாநில காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் அந்த மாநில முதலமைச்சராக மூன்று முறை பதவி வகித்தவருமான தருண் கோகாய் கடந்த ஓகஸ்ட் 25 ஆம் திகதி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டார்.



பின்னர் குணம் அடைந்த நிலையில் அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் கடந்த முதலாம் திகதி மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

# ஜனவரி மாதம் முதல் தென் இந்திய நகர ஆன்மீக சுற்றுலா சிறப்பு ரயில்!



இந்திய ரயில்வே நிர்வாகம் தென் இந்திய ஆன்மீகச் சுற்றுலாவுக்கான சிறப்பு ரயிலை இணைக்கிறது.

பாரத தரிசனம் என்ற பெயரில் ஏழு இரவுகள் எட்டு பகல்களுக்கு இந்த ஆன்மீகச் சுற்றுலா நடைபெறும். புவனேசுவரர் தொடங்கி, ராமேஸ்வரம், மதுரை, திருப்பதி வரை இந்த சுற்றுலா நீடிக்கும்.

இந்த சுற்றுலாவுக்கான கட்டணம் 8 ஆயிரத்து 85 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புத்தாண்டில் ஜனவரி 2ஆம் திகதி முதல் இந்த பாரத தரிசனம் ரயில் சேவை ஆரம்பிக்கும்.

இதற்கான முன்பதிவு ஒன்லைன் மூலம் செய்து கொள்ளலாம் என்று ரயில்வே உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கொரோனா பாதிப்பின் அச்சம் காரணமாக அனைத்து வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரையும் விடுவிக்கும் முடிவு ஆளுநரிடமே!

## சி.பி.ஐ. தெரிவிப்பு

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை விடுதலை செய்கின்றமை தொடர்பாக ஆளுநரே முடிவு செய்யலாம் என்று சி.பி.ஐ. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டில் தமிழக அமைச்சரவை, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற ஏழு பேரையும் விடுதலை செய்ய தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்குப் பரிந்துரை செய்தது.

இதற்கான முடிவை ஆளுநர் பன்வாரிலால் புரோகித் இன்னும் எடுக்கவில்லை. இந்நிலையில் இது தொடர்பான விசாரணையில் உச்ச நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்த சி.பி.ஐ. தரப்பு, பேரறிவாளன் உட்பட ஏழு பேரை விடுதலை செய்யும் விவகாரத்தில் சி.பி.ஐக்கு எந்த விதத் தொடர்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் ஆளுநரே முடிவெடுக்க முடியும் என்றும் சி.பி.ஐ. குறிப்பிட்டுள்ளது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1991.06.05
நட்சத்திரம் - சதயம்
பாவம் - 41 1/4
செவ் - 02இல்
கல்வி - பட்டதாரி
தொழில் - வங்கி வேலை
எதிர்பார்ப்பு - கனடா OR UK

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1999.03.23
மதம் - இந்து V
நட்சத்திரம் - மிருகசீரிடம்
பாவம் - 17 1/4
செவ் - -----
கல்வி - A/L
தொழில் - -------
எதிர்பார்ப்பு - சாதாரண மணமகன்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# 1,300 ஆண்டு பழைய கோவில் பாகிஸ்தானில் கண்டுபிடிப்பு!





வடமேற்கு பாகிஸ்தானின் ஸ்வாத் மாவட்டத்தில், சுமார் 1,300 ஆண்டுகள் பழைமையான இந்துக் கோயிலை பாகிஸ்தான் மற்றும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த தொல்லியத்துறை நிபுணர்கள் கண்டுபிடித் துள்ளனர்.

பரிகோட் குண்டாய் பகுதியில் நடைபெற்று வரும் அகழாய்வு பணியின்போது இந்த புராதன கோயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கோயிலுக்கு அருகே படைநிலை களும், நேரத்தைக் காட்டும் கோபுரங்கள், நீர்த்தொட்டி ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் துறை முக்கியத்துவம் வாய்ந்த பகுதி யாக இந்த ஸ்வாத் மாவட்டம் இருந்ததாலும், இந்து சாஹி காலத்தில் கட்டப்பட்ட பல கட்ட அமைப்புகள் முதல்முறையாகத் தற்போதுதான் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது விஷ்ணு கோவிலாகும்.

# சிலியில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை!

சிலியில் அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

ஓய்வூதியம், சுகாதாரம், கல்வி முறை ஆகியவற்றில் சீர்திருத்தம் கோரி கடந்த ஓராண்டுக்கும் மேலாக அங்கு போராட்டங்கள் நடைபெற்று வருகினறன.

இந்நிலையில், தலைநகர் சாண்டியாகோவில் அரசுக்கு எதிராக கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்கா ரர்கள் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்கியமையால் இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதனையடுத்து கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தண்ணீரை பீச்சியடித்தும் பொலிஸார் கூட்டத்தைக் கலைத்தனர்.



# பூட்டான் எல்லைக்குள் சீனக் கிராமம் இல்லை!

## பூட்டான் தூதர் அறிவிப்பு

பூட்டான் எல்லைக்குட்பட்ட பகுதியில் சீனா புதிய கிராமம் எதையும் அமைக்க வில்லை என்று பூட்டான் தூதர் மேஜர் ஜெனரல் வெட்ஸாப் நாம்கியல் அறிவித் துள்ளார்.

ஆனால் பாங்டா என்ற கிராமத்தை சீனா தனது குடியிருப்பாக மாற்றியுள்ளதாக வரைபடங்களை ஆதாரமாக வைத்து ஊடகங்கள் தெரிவித்துள்ளன. பூட்டான் எல்லைக்குள் இரண்டு கிலோ மீற்றர் வரை ஊடுருவிய சீனா அங்கு தனது மக்களை குடியமர்த்தியுள்ளதாகவும் புதிய கிராமத் தையே உருவாக்கியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் பூட்டான் தூதரின் மறுப் பில் உண்மையில்லை என்று சீனா ஊடகங் கள் வரைபடத்தை வெளியிட்டுள்ளன.

# வாடிக்கையாளர்களை ஈர்த்த முகக்கவசம் அணிந்த கிறிஸ்மஸ் தாத்தா சொக்லேட்!



ஹங்கேரியில், முகக் கவசம் அணிந்த கிறிஸ்மஸ் தாத்தா சொக்லேட்கள், வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சொக்லேட் தயாரிப்பா ளரான லஸ்லோ ரிமோக் சியின் வியாபாரம், கொரோனா ஊரடங்கால், பல மாதங்களுக்குப் பாதிக்கப்பட்டது.

கிறிஸ்மஸ் பண்டிகையை வர வேற்க தயாரான அவர், கொரோனா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, தான் வழக்க மாக தயாரிக்கும் சாண்டா கிளாஸ் சொக்லேட்களுக்கு, பாதாம் கிரீமால் முகக்கவசம் அமைத்துள்ளார்.

ஆரம்பத்தில் சிலர் முகம் சுழித் தாலும், பின்னர அதற்கான ஓடர்கள் குவியத் தொடங்கியமையால், தற் போது தினந்தோறும் 100 சாண்டா கிளாஸ் சொக்லேட்களை தயாரித்து வருகிறார்.

# உலகின் முக்கிய தலைவர்களை கொல்ல கொரோனா வைரஸ் கொண்ட கடிதங்கள்!

உலகில் முக்கிய தலைவர்களைக் கொல்ல கொரோனா வைரஸ் கொண்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்படலாம் என்று உலக நாடுகளின் தலை வர்களுக்கு இன்டர்போல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச குற்றத் தடுப்பு அமைப்பான இன்டர்போல் வெளியிட்டுள்ள வழிகாட்டலில், இந் தியா உள்ளிட்ட நாடுகளின் பாதுகாப்பு பிரிவினர், மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சில அரசியல் தலைவர்களைக் கொல்ல கொரோனா வைரஸ் பூசிய கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டி ருக்கின்றன என இன்டர்போல் தெரி வித்துள்ளது.

# அல் குவைதா இயக்கத்தின் தலைவர் ஜவாஹிரி உயிரிழந்தார் என தகவல்



அல் குவைதா இயக்கத்தின் தலைவர் அய்மான் அல் ஜவாஹிரி உயிரிழந்தார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

2011 இல் பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் ஜவாஹிரி அல் குவைதாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இதனைத் தொடர்ந்து இவரின் தலைக்கு 2 கோடியே 50லட்சம் டொலர்களை விலையாக வைத்தது அமெரிக்கா.

ஆனால் ஆப்கானிஸ்தானில் பதுங்கி வாழ்ந்த அய்மான் அல் ஜவாஹிரி ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் கடும் மூச்சிரைப்பு காரண மாக ஜவாஹிரி உயிரிழந்தார் என பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஊட கங்கள் தெரிவித்துள்ளன.

# தாய்லாந்து பிரதமருக்கு எதிராக வலுக்கும் மாணவர் போராட்டம்!

தாய்லாந்து பிரதமரை அந்நாட்டு அரசர் பதவி நீக்கம் செய்யும்படி வலியுறுத்தி, ஏராளமான மாணவர்கள் தலைநகர் பாங் கொக்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவப் புரட்சி மூலம் பிரதமர் பதவியைக் கைப்பற்றிய பிரயூத் சான் ஒச்சா - வுக் எதிராகக் கடந்த ஜூலை மாதம் முதல் போராட்டங்கள் வலுத்துள் ளன.

தாய்லாந்து பிரதமரை டைனோசருடன் ஒப்பிட்டு மேடை நாடகம் அரங்கேற்றிய மாணவர்கள், கல்வித் திட்டத்தில் மாற் றங்களைக் கொண்டு வருமாறு வலியுறுத்தி னர்.





# 14 வயதுடைய சீனச் சிறுவன் அதிக உயரத்தில் சாதனை!

சீனாவில் 14 வயது சிறுவன் ஒருவன் உலகில் அதிக உயரமுடைய சிறுவன் என்ற கின்னஸ் சாத னையை படைத்துள்ளான்.

சிக்குன் மாகாணத்தில் வசிக்கும் றென் கியூ என்பவன் தான் இந்த சாதனைக்குச் சொந்தக்காரன் ஆவான். அவனது உயரம் 7அடி 3.02 அங்குலமா கும்.

அவனை ஒரேநாளில் 3 முறை வெள;வெறு நிலைகளில் படுக்க வைத்தும் நிற்க வைத்தும் கின்னஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அளந்து பார்த்தனர்.

அவனது தாய் மற்றும் தந்தை 6 அடி உயரம் இருப்பதால் மரபணு காரணமாக இந்த உயரம் சிறுவனுக்கு வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# ட்ரம்பின் மூத்த மகன் ஜீனியருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது!



அமெரிக்க அதிபர் ட்ரம் பின் மூத்த மகன் டொனால்டு ட்ரம்ப் ஜூனியருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அறிகுறிகள் ஏதுமில்லாததால் தன் னுடைய அறையிலேயே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

42 வயதான றொனால்டு ட்ரம்ப் ஜூனியருக்கு இந்த வார ஆரம்பத்தில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாகவும், மருத்துவ வழிகாட்டுதல்களைப் பின்பற்றி வருகிறார் எனவும் அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அதிபர் ட்ரம்ப், அவரது மனைவி மெலனியா, இளைய மகன் பரோன் ஆகியோர் ஏற்கெனவே கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# யுத்தம் பாதித்த வடக்கு – கிழக்கு மக்களுக்கு வரவு – செலவுத் திட்டத்தால் பயன் ஏதுமில்லை!

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. காட்டம்

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு எந்த வித நிவாரணமும் உள்ளடக்கப்படாத வரவு – செலவுத் திட்டமொன்றையே இம்முறை அரசு முன்வைத்துள்ளது. வடக்கு, கிழக்கு என்பது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்பதை இந்த வரவு – செலவுத் திட்டம் முற்றாக மூடி மறைத்துள்ளது.

– இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை, 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த வரவு – செலவுத் திட்டம் சிங்கள தேசத்தையும், யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளையும் சமத்துவம் ஆக்கும் நோக்கில் முன்வைக்கப்படவில்லை.

யுத்தத்தால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் மற்றும் வர்த்தகங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பது அனைவருக்கும் தெரியும்.

போரால் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள், பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகள், பிள்ளைகளை இழந்து தவிக்கும் வயது முதிர்ந்தவர்கள், சரணடைந்தவர்களின் குடும்பங்கள், வலிந்து காணாமல்



ஆக்கப்பட்டவர்களில் தங்கியிருந்த பெண்கள், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள், முன்னாள் போராளிகள், புனர்வாழ்வு பெற்றவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு தரப்பினர்களை இந்த வரவு – செலவுத் திட்டம் கைவிட்டுள்ளது.

அழிவுகளிலிருந்து மீளக்கட்டியெழுப்புவதற்கான ஒதுக்கீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அனைவரும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கை என்ற பெயரில் தென்பகுதியையும், போரால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கையும் ஒரே மாதிரி கட்டியெழுப்ப முடியாது. இலங்கையில் மிகவும் ஏழ்மையானவர்கள் வாழும் பகுதியாக வடக்கு, கிழக்கு மாத்திரமே காணப்படுகிறது. கடந்த 11 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களின் கொள்கைகளால் இந்தப் பிரதேசங்கள் முன்னேற முடியாதவாறு முடங்கிப்போயுள்ளன.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பாக அறிவிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் வடக்கு கிழக்கில் நீரியல்வளத் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தென்னிலங்கை மீனவர்களின் சட்டவிரோதமான மீன்பிடிகளை அதிகரித்துள்ளனர்.

இதனால் வடக்கு கிழக்கின் நீண்ட கடற்பிரதேசம் அழிக்கப்பட்டுள்ளது. இதனால் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் தொழிலை கைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் விவசாய நடவடிக்கைகள், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களால் அழிக்கப்பட்டுள்ளன. சுதந்திரமாக மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

முல்லைத்தீவு மணலாறு பகுதிகளில் காணிகளை வைத்திருந்தவர்களின் உரிமங்கள் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பறிக்கப்பட்டு சிங்கள மக்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. இதனை மீள வழங்குமாறு கோரியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 லட்சம் மாடுகளைக் கொண்டுள்ள பண்ணையாளர்கள் தமது இடங்களிலிருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். – என்றார்.

# தொடர் முடக்கத்தினால் பட்டினி நிலையில் நாம்!

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஒரு மாதகாலமாகத் தொடரும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தால், தமது வாழ்வாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி மோதரை மற்றும் இக்பாவத்தை பகுதி மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று (சனிக்கிழமை) காலை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த போராட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பொலிஸார் முயன்றபோதும், அதிகளவான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமையால் அங்கிருந்து அவர்கள் வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளதாவது –

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் எங்களது பகுதிகளில் அதிகரித்தமையால் கடந்த ஒரு மாதகாலமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்றது.

இதனால் தொழிலுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா எங்களது குடும்பத்தின் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

மேலும் உணவின்றி பட்டினி கிடக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே அரசு எங்களது நிலைமையை உணர்ந்து உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறு குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.– என போராட்டத்தில்ஈடுபட்டுள்ளோர்கவலைவெளியிட்டுள்ளனர்.

## விமல் என்ற துரோகிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பு மாவட்டத்தில் வாழும் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். எவராவது மரணித்தால் சவப்பெட்டி வாங்குவதற்குக் கூட திண்டாட வேண்டியுள்ளது. அவர்கள் இவ்வாறு துன்பப்படுகையில் மக்களை இழிவுபடுத்தும் வகையில் விமல் கருத்து வெளியிடுகின்றார். விமல் வீரவன்சவின் வீட்டிலுள்ள நாயை பராமரிப்பதற்குக் கூட மாதமொன்றுக்கு 5 ஆயிரம் ரூபா செலவிடப்படுகின்றது என சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், கொரோனாத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை இழிவுபடுத்தும் வகையில் அவர் கருத்து வெளியிடுகின்றார்.

கொழும்பு மாநகர சபைக்கு சைக்கிளில் வந்த அவர் கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு இன்று கோடீஸ்வரர் ஆகியுள்ளார். அடுத்த பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்ட மக்கள் விமலுக்குத் தக்க பாடத்தை புகட்டுவார்கள் – என்றார்.

# சவால்களை எதிர்கொள்வதை விளக்க அரசு தவறிவிட்டது!

## ஐ.தே.க. பிரதித் தலைவர் ருவான் தெரிவிப்பு



வரவு – செலவுத் திட்டத்தில் சில நல்ல திட்டங்கள் இருந்தாலும் தற்போது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுப்பது தொடர்பான திட்டங்கள் பற்றிய விளக்கம் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், நாட்டின் தற்போதைய பொருளாதாரத்தின் நிலைமையை வெளிப்படுத்த அரசு தவறிவிட்டது என்றும் இந்த சவால்களை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பதைக் காட்டத் தவறிவிட்டது என்றும் குற்றம் சாட்டினார்.

பொருளாதார சிக்கல்களால் பெருமளவான நிறுவனங்கள் அடுத்த ஆண்டு மூடப்படவுள்ளன, அத்தோடு பலர் வேலையை இழக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ள நிலையில் இந்த பிரச்சினையை எவ்வாறு கையாளப் போகிறது என்பது தொடர்பாக அரசு பேசவில்லை என ருவான் விஜேவர்தன சுட்டிக்காட்டினார்.

மேலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் நாளாந்த ஊதியத்தை நம்பி இருக்கும் மக்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவிலும் அரசு சிரமத்தை எதிர்கொள்கிறது எனக் குறிப்பிட்ட ருவான் விஜேவர்தன, இந்தத் திட்டத்தை தொடர முடியாவிட்டால் அரசு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வரவு – செலவுத் திட்டத்தில் ஓய்வூதிய வயதை 60 ஆக உயர்த்துவதற்கான திட்டம் வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்த ருவான் விஜேவர்தன, இருப்பினும், ஈ.பி.எவ். கோருவதற்கான தகுதியான வயதை 60 ஆக நீடிக்கும் போது, அவர்களின் நோக்கம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் விவசாயம் போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்துவது பாராட்டத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு, தேத்தாதீவு விபத்து: சிகிச்சை பலனின்றி சிறுமி சாவு!

முட்டக்களப்பு, தேத்தாதீவில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

தேத்தாதீவைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குபட்பட்ட தேத்தாதீவு கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் பிரதான வீதியை கடந்து கடைக்குச் சென்று திரும்பிய 7 வயது சிறுமி மீது பொலன்னறுவைப் பகுதியிலிருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய ரக லெறி ஒன்று மோதியதில் அந்தச் சிறுமி படுகாயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமி உடனடியாக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

சிறுமிக்கு மேலதிக சிகிச்சையை தொடர சி.ரி.ஸ்கான் எடுக்க வைத்தியர்கள் ஆலோசித்தபோதும் சி.ரி.ஸ்கான் எடுக்கும் கதிரியக்கவியலாளர்கள் கடந்த 2 அரை



மாதங்களாகத் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு கடமைக்குச்சமுகம்கொடுக்காமல் இருந்துவருகின்றாமையால் கால தாமதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சி.ரி.ஸ்கான் அறிக்கையைப் பார்வையிட்ட வைத்தியர்கள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் அளவிற்கு சிறுமியின் உடல் நிலை இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை இரவு சிறுமி உயிரிழந்துள்ளார். சிறுமியின் உடலைப் பார்வையிட்ட களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி எஸ்.ஜீவரெட்ணம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி களுவாஞ்சிகுடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.